# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, மார்கழி 26, திருவள்ளுவர் ஆண்டு 2048

## 2018 ஜனவரி 10, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்."*

*ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றியடைவார்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

***14562—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊத்தங்கரை தொகுதி, கே. பாப்பாரப்பட்டி ஊராட்சி, பச்சூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*[2018 ஜனவரி 10*

*சத்துணவு தந்த சரித்திர நாயகர், பாரத ரத்னா இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணப்படி மதுரையில் தொடங்கி, தமிழகத்திலுள்ள 30 மாவட்டங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கும் அளவுக்கு இதுவரையில் எந்தவொரு தலைவருக்கும், யாரும் எடுக்காத வகையில் மாபெரும் விழாவை எடுத்து நடத்திக்காட்டியதோடு, இதன்தொடர்பாக பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவில் நிதியொதுக்கி புதிய திட்டங்களை தமிழக மக்களுக்கு அறிவித்தவரும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்களை மக்களின் பயன்பாட்டுக்கு அளித்தவரும், மதுரை மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குடிநீர்த் தேவையினைப் பூர்த்தி செய்யும்வகையில் ரூ.1,298 கோடி மதிப்பீட்டில் பெரியார் அணையிலிருந்து குழாய்மூலம் மதுரைக்குக் குடிநீர் கொண்டுவரும் மாபெரும் திட்டத்தை வழங்கி இனி 60 ஆண்டுகளுக்கு குடிநீர் பிரச்சினையே மதுரையில் இல்லை என்ற நிலையை உருவாக்கியவரும், ஏழையெளிய சாதாரண பாமர மக்களும் எளிதில் அணுகக்கூடிய இனிய முதல்வர், இனிய தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், ஆட்சிக்கும், கட்சிக்கும் துணையாகவும், இணையாகவும், அரணாகவும், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் கழகத்தை வழிநடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்து என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பச்சூர் பகுதியைச் சேர்ந்த 175 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 302 குடும்ப அட்டைகளுடன் கே. பாப்பாரப்பட்டி முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைகளின்படி பச்சூர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2018 ஜனவரி 10*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

**திருமதி நா. மனோரஞ்சிதம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் மக்கள் மனதில் குடியிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியத்திலுள்ள பச்சூர், கே. பாப்பாரப்பட்டியிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால். அப்பகுதி மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். மேலும், அப்பகுதியில் போக்குவரத்து வசதியும் இல்லாமல் இருக்கின்றது. அப்பகுதி மக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்தப் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்துவதில் தமிழக கூட்டுறவு அமைப்புகள் பெரும் பங்காற்றி வருகின்றன. கிராமப்புற மக்களும் எளிதில் அத்தியாவசியப் பொருட்களை எவ்வித சிரமமுமின்றி பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1978 ஆம் ஆண்டு ஒரு கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை என்ற வகையில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 30–11–2017 அன்றுள்ளவாறு தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களில் 1,78,67,982 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இதன்படி, 30–11–2017 வரை மாநிலத்தில் 23,725 முழு நேர நியாய விலைக் கடைகளும், 9,046 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், ஆக மொத்தம் கூட்டுறவுத் துறையால் மட்டும் 32,771 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.*

இதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த 30–11–2017 முதல் இன்றுவரை 653 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1,609 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் என, ஆக மொத்தம் புதிதாக 2,262 நியாய விலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10–05

அதேபோன்று, மாண்புமிகு சகோதரி திருமதி மனோரஞ்சிதம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மக்கள் எளிதில் அணுக இயலாத, ஊரகப் பகுதிகள், மலைப் பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை எளிதில் பெறும்பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த 6 ஆண்டுகளில் 39 நகரும் நியாய விலைக் கடைகளை அமைத்து சேவையாற்றி வருகிறது.

அதுமட்டுமல்ல, சென்னை போன்ற நகரங்களில் அதிக குடும்ப அட்டைகள் கொண்ட கடைகளை உள்ளடக்கிய பகுதிகளில் இன்றைக்கு இரண்டு நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக ஏறத்தாழ 52 தெருக்களில் மக்களுடைய தேவைகளை அறிந்து, பொது விநியோகத் திட்ட பொருட்கள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு சகோதரி கூறும் பகுதியானது தாய்க் கடையிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. ஏற்கெனவே அந்தத் தாய்க் கடையில் கார்டுகள் மிகவும் குறைவாக, அதாவது 302 கார்டுகள் மட்டுமே இருக்கின்றன. அதிலும் 175 கார்டுகளைப் பிரித்துவிட்டால், 127 கார்டுகள் மட்டுமே இருக்கும். இருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் எடுத்துச் சொல்லி அந்தக் கடையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், இதனை சிறப்பினமாகக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணைப் பார்வைக்கு கொண்டுசென்று, அதை உடனடியாகச் செய்வதற்கு ஆணையைப் பெற்று செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.

**திருமதி நா. மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு

*2018 ஜனவரி 10]*

*புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அங்கு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர ஆவன செய்யப்படுமென அறிவித்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தருமபுரம் ஊராட்சி, திக்கிலான்விளை கிராமம் மற்றும் தோவாளை ஊராட்சி, குருக்கள்மடம் கிராமம் மற்றும் சகாயநகர் ஊராட்சி, பண்டாரபுரம் கிராமம் ஆகிய பகுதிகளிலே சுமார் 200–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் இருக்கின்றனர். அந்தப் பகுதி மக்கள் நியாய விலைக் கடைக்கு சென்று பொருட்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், 2 கிலோ மீட்டர் தூரத்துக்குமேல் நடந்து சென்றுதான் வாங்க வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதிகளில் பேருந்து வசதியும் இல்லை. பலமுறை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களும், நானும் இணைந்து சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரைச் சந்தித்து இதுசம்பந்தமாக மனுக்களைக் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட ஓராண்டு ஆகியும் இன்னும் அதற்கான தீர்வு கிடைக்கப்பெறவில்லை. எனவே, தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மாண்புமிகு திருமதி மனோரஞ்சிதம் அவர்களுக்கு சிறப்பினமாகக் கருதி வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல, இந்த அவையிலேயே மேற்கண்ட 3 கிராமங்களையும் சிறப்பினமாகக் கருதி பகுதி நேர நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

*நேற்றையதினம், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நியாய விலைக் கடைகளிலே பொங்கல் பொருட்கள் முழுமையாக வழங்கப்படுகின்றன; எந்தக் கடையிலாவது வழங்கப்படவில்லை என்று சொன்னால், உறுப்பினர்கள் தெரிவிக்கலாம், அதைச் சரிசெய்கிறேன் என்று சொன்னார்கள்.*

[2018 ஜனவரி 10

கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக, அனைத்துக் கடைகளுக்குமே 50 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதம் வரைதான் பொருட்கள் வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். குறிப்பாக, நான் சார்ந்திருக்கின்ற கிராமத்தைச் சேர்ந்த மேலகிருஷ்ணன்புதூர் நியாய விலைக் கடையிலே 1,732 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதில் 1,200 பேருக்குத்தான் அங்கே பொங்கல் பொருட்கள் வந்திருக்கின்றன. இன்னும் 532 பேருக்கு வர வேண்டியிருக்கிறது என்று நேற்றையதினம் அந்த நியாய விலைக் கடையைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். அதையும் நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பிற்கினிய அன்பு சகோதரர் திரு. ஆஸ்டின் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த அரசு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பார்ப்பதில்லை. மக்களுடைய தேவைதான் முக்கியம். தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு ஏறத்தாழ 2,262 கடைகளைத் திறந்து நடத்திக் கொண்டிருக்கின்றது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற கடையில் எத்தனை கார்டுகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, சிறப்பினமாகக் கருதி, நிச்சயமாக எதிர்காலத்தில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பொங்கல் பரிசைப்பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பொங்கல் பரிசு அனைவருக்கும் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1 கோடியே 84 இலட்சம் குடும்பங்களுக்கும் வருகிற 11–1–2018 ஆம் தேதிக்குள் அனைத்துக் கடைகளிலும் கொடுத்து முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாகக் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் சங்கடப்பட வேண்டிய

2018 ஜனவரி 10]

தேவையில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சிறப்பினமாக உறுதியாகக் கொடுக்கப்படும்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், பெரவலூர் ஊராட்சியில் சூரப்பந்தாங்கல் என்ற கிராமம் உள்ளது. பெரவலூர் ஊராட்சிக்கும், சூரப்பந்தாங்கலுக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நாங்கள் பணியாற்றுகிறோம் என்று சொன்ன அந்த சொல்லை வரவேற்று, மக்கள் வெகுதூரம் நடந்து சென்று ரேஷன் கடையில் பொருட்கள் வாங்குகின்ற சிரமத்தைப் போக்குகின்ற வகையில் எங்கள் தொகுதியில் உள்ள சூரப்பந்தாங்கல் கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த ரேஷன் கடையில் வழங்கப்படுகின்ற துவரம் பருப்பு போன்ற பொருட்கள் எடைபோட்டு கொடுக்கப்படுவதால் அளவு குறைவாக இருக்கிறது. ஒரு கிலோ எடையுள்ள பாக்கெட்டுகளாகப் போட்டு அதை வழங்கினால் மக்களுக்கு முழுமையாக ஒரு கிலோ துவரம் பருப்பும் போய்ச் சேரும். எந்தவிதமான தவறும் நடக்காமல் இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான் அவர்கள் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால், கிராமப்புற கடையாக இருந்தால் 500 முதல் 800 குடும்ப அட்டைகள் வரை இருக்க வேண்டும். கடை பிரிக்கப்பட்ட பிறகு, பிரிக்கப்பட்ட பகுதி நேரக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். பிரித்த பிறகு தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப

[2018 ஜனவரி 10

அட்டைகள் இருக்க வேண்டும். இந்தமாதிரி நிபந்தனைக்குட்பட்டு அவை இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதேநேரத்தில் மக்கள் எளிதில் அணுகமுடியாத சூழ்நிலை இருக்குமேயானால், சிறப்பினமாகக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரே இதில் முடிவு எடுக்கலாம். அவருக்கு சிறப்பு அதிகாரம் இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, நிச்சயமாக அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**12—**

**துணை மின் நிலையம்**

***5590—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குன்னம் தொகுதி, குன்னம் வட்டம், காடூர் ஊராட்சி, நல்லறிக்கை கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கோரிய அவர் தொகுதியிலுள்ள வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், காடூர் ஊராட்சி, நல்லறிக்கை கிராமத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும்*